**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 96 /2019 PW1**

19.06.2025 **வா.சா.1 சரசு சத்திய வாக்குமூலத்தின் பேரில் 1, 2, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை, விபத்தை வேறு யார் பார்த்தது என்று எனக்கு தெரியாது. எனது கணவர் மின்சாரம் தாக்கி இறந்த விவரத்தை தேவராஜ் என்பவர் சொன்னார். தேவராஜ் எனக்கு உறவினர் கிடையாது. எனது கணவரை சவாரிக்காக அழைத்துச் சென்றார். என் கணவர் ஓட்டிச் சென்ற டாடா ஏஸி வாகனம் எங்களுக்கு சொந்தமானது ஆகும். தேவராஜ் என்பவர் எங்கள் ஊரில் தான் வசிக்கிறார். தேவராஜை எங்கள் தரப்பில் விசாரணை செய்ய போகிறோமா என்றால் ஆம் விசாரிக்க இருக்கிறோம். விபத்து சமயத்தில் காற்றும், மழையும் அடித்தது என்றால் சரிதான். விபத்தானது போளூர் சந்தையில் நடந்தது. வண்டி நின்றிருந்த இடத்திற்கு நேராக மின் ஒயர் அறுந்து விழுந்ததா என்றால் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி சுரேஷ் அவர் கடையில் இருந்து மின்சாரத்தை எடுத்து வேலை செய்யும் இடத்திற்கு பயன்படுத்தினார். திருட்டுத்தனமாக மின்சாரத்தை கடையில் இருந்து எடுத்து வேலை செய்யும் இடத்தில் பயன்படுத்தினார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி அவர் கடையில் இருந்து மின் ஒயரை சம்ப இடத்திற்கு கொண்டு வராமல் இருந்திருக்கும் பட்சத்தில் விபத்து ஏற்பட்டு இருக்காது என்றால் சரிதான். மின் ஒயரை கொம்புகளை நட்டு அதன் வழியாக சம்பவ இடத்திற்கு கொண்டு வந்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் சம்பவத்திற்கு பிறகு நான் அங்கு சென்றபோது கேள்வி பட்டேன். இந்த விபத்திற்கு 3ம் பிரதிவாதி, மற்றும் எனது கணவரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்திற்கு மின்சாரத் துறை காரணம் என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் கேட்டுக் கொண்ட இழப்பீட்டை கொடுக்க மின்சார துறை கடமைபட்டது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏதேனும் இழப்பீடு கொடுக்க வேண்டி ஏற்படும் பட்சத்தில் அதனை 3ம் பிரதிவாதி தான் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. அதிகமான இழப்பீடு கோரும் பொருட்டு தவறான சங்கதிகள் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.